**சிறப்பு நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்**

**முன்னிலை : திரு.மு. வடிவேல், பி.காம்., பி.எல்.,**

**சிறப்பு நீதிபதி எண்.1, ஜெயங்கொண்டம்**

**2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் தேதி செவ்வாய் கிழமை**

**மேல்முறையீட்டு வழக்கு எண்.11/2021 ( CNR No.TNAL06-000247-2021)**

**(ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்ற அ.வ.எண்.120/2017)**

**திரு. ராஜேந்திரன் ... மேல்முறையீட்டாளர்/வாதி**

**எதிர்**

**1. திருமதி. அன்னம்மை அம்மாள்(இறப்பு)**

**2. திருமதி. கல்யாணி(இறப்பு)**

**3. திருமதி. அலமேலு**

**4. திருமதி. பழனியம்மாள்**

**5. திருமதி. முத்துலெட்சுமி**

**6. திருமதி. இந்திரா ... எதிர்மேல்முறையீட்டாளர்/பிரதிவாதிகள்**

**(ஜெயங்கொண்டம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.44/2005 ல் கடந்த 28.07.2017 ஆம் தேதியன்று பிறப்பித்துள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் குறைவுற்ற வாதியால் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.)**

**<u>விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்கள் விவரம்</u>**

**திரு. ராஜேந்திரன் ... வாதி**

**எதிர்**

**1. திருமதி. அன்னம்மை அம்மாள்(இறப்பு)**

**2. திருமதி. கல்யாணி(இறப்பு)**

**3. திருமதி. அலமேலு**

**4. திருமதி. பழனியம்மாள்**

**5. திருமதி. முத்துலெட்சுமி**

6. திருமதி. இந்திரா ... பிரதிவாதி

இவ்வழக்கு முதன் முதலில் ஜெயங்கொண்டத்தில் உள்ள சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அங்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்தபோது அரியலூரில் உள்ள முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பேரில் இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கு வந்தவுடன் புதிதாக வழக்கு எண் கொடுக்கப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிலுவையில் இருந்து வந்த இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.திருமால்சோழன் அவர்களும், 1, 2 ஆம் எதிர் மேல்முறையீட்டாளர்கள்/1, 2 ஆம் பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையிலும், 6 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்/6 ஆம் பிரதிவாதி தோன்றா தரப்பினராக இருந்து வந்தும், 3 மற்றும் 4 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பாண்டியன் அவர்களும், 5 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்/5 ஆம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.T.ஆனந்தன் அவர்களும் முன்னிலையாகியுள்ள இவ்வழக்கானது 19.04.2022 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மேல்முறையீட்டாளர் தரப்பில் எந்த முன்மொழிவும் இல்லை. எனவே வழக்கு ஆவணங்கள் பார்வையிட்டதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>தீர்ப்புரை</u>

1. ஜெயங்கொண்டம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.44/2005 ல் கடந்த 28.07.2017 ஆம் தேதியன்று பிறப்பித்துள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்யக்கோரி வாதியால் இந்த மேல்முறையீடு உரிமையியல் நடைமுறை சட்டப்பிரிவு 96 கட்டளை 41 மற்றும் விதி 1 மற்றும் 2 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மேல்முறையீட்டில் 3 முதல் 5 எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்துள்ளனர். 6 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தோன்றா தரப்பினராக இருந்து வருகிறார்.

3. இவ்வழக்கானது மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பு வழக்கறிஞர் வாதத்திற்காக நிலுவையில் இருந்து வருகிறது. பல முறை வாய்ப்புகள் வழங்கியும் மேல்முறையீட்டாளர்/வாதி தொடர்ந்து ஆஜராகவில்லை. இதனை அடுத்து இவ்வழக்கினை மேல்முறையீட்டாளர்/வாதியின் தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்திட இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக மேல்முறையீட்டாளர்/வாதியின் தவறுகையின் காரணமாக இந்த வழக்கை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் திருத்தப்பட்டு இன்று 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் தேதி அவையறிய பகரப்பட்டது.

M VADIVEL

Digitally signed by M VADIVEL
Date: 2022.04.19 18:23:14 +0530

சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.